# வருவாய்த்துறை அலுவலர் சங்கக்குரல்

# Varuvaithurai Aluvalar Sangakural

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாத இதழ்

Issue 35 May 2023 Issue 5



வரலாற்று சிறப்பு மிக்க மூன்று அமைச்சர்களுடன் TNROA நடத்திய பேச்சுவார்த்தை



மூன்று அமைச்சர்களுடனான பேச்சுவார்த்தையின் இறுதியில் அமைச்சர் பெருமக்களுக்கு TNROA சார்பில் நினைவு பரிசு வழங்கி நன்றி தெரிவிக்கப்பட்டது

தனிப்பிரதி விலை ரூ.10/-
Per Copy Rs.10/-

ஆண்டு சந்தா ரூ.120/-
Annual Subscription Rs.120/-

## TNROA சார்பில் 10.05.2023 அன்று சென்னையில் நடைபெற்ற காத்திருப்பு போராட்ட நிகழ்வுகள்



சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்
மாநிலப் பொதுச் செயலாளர் தோழர் சு.சங்கரலிங்கம் மேற்கொண்ட பிரச்சாரம்



சென்னையில் நடைபெற்ற காத்திருப்புப் போராட்டத்தில் தமிழ்நாடு
தலைமைச் செயலக ஊழியர்கள் தலைவர் தோழர் வெங்கடேசன்
வாழ்த்துரை வழங்கியபோது





போராட்டக் களத்திலேயே வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலக வாயிலில் நடைபெற்ற
மாவட்ட நிர்வாகிகளின் அவசரக் கூட்டம்

# மே 10 - வரலாற்று சிறப்பு மிக்க சென்னை காத்திருப்பு போராட்டம் - வைரவிழா ஆண்டின் தொடக்கத்தில் பொன் முத்திரை

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் தூத்துக்குடி மத்திய செயற்குழு கூட்டத்தின் ஒருமனதாக முடிவின்படி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களின் வாழ்வாதாரக் கோரிக்கைகளை வலியுறுத்தி 10.5.2023 அன்று ஆயிரத்திற்கும் மேற்பட்ட வருவாய்த்துறை அலுவலர்கள் சென்னை சேப்பாக்கம் வருவாய் நிருவாக ஆணையரக வளாகத்தில் கோரிக்கைகள் நிறைவேறும் வரை தொடர்ந்து காத்திருப்பது என முடிவு செய்யப்பட்டது.

மத்திய செயற்குழு கூட்ட முடிவினை முழுமையாக அமல்படுத்திடும் வகையில், மாநில நிர்வாகிகளின் எழுச்சியான பரப்புரை அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்றது. காத்திருப்பு போராட்டத்திற்கு பல நாட்கள் முன்பாகவே அநேக மாவட்டங்களில் நோட்டீஸ், வாகன ஏற்பாடு என அனைத்து பணிகளும் மேற்கொள்ளப்பட்டது.

போராட்டத்திற்கு முந்தைய தினமே மதிப்பிற்குரிய வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் மாநில நிர்வாகிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள். நமது தரப்பில் ஏற்கனவே, ஆகஸ்ட், 2022ல் நடைபெற்ற அமைச்சர் தலைமையிலான பேச்சுவார்த்தையில் அனைத்து கோரிக்கைகளும் ஏற்கப்பட்டு எழுத்துபூர்வமான கூட்ட முடிவுகள் வழங்கப்பட்ட 9 மாதங்கள் கடந்த நிலையிலும் கோரிக்கைகளை நிறைவேற்ற ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றும் ஆணையரகம் மற்றும் தலைமைச் செயலக அலுவலர்கள் மட்டத்தில் உள்ள மெத்தனத் தன்மைக் குறித்து ஆணித்தரமாக எடுத்துரைக்கப்பட்டது.

போராட்ட நாளான 10.5.2023 அதிகாலையிலேயே பல மாவட்டங்களிலிருந்து சாரைசாரையாக வருவாய்த்துறை அலுவலர்கள் சென்னையில் அணிவகுக்க தொடங்கினர். அவர்களுக்கான தங்கும் மற்றும் உணவு ஏற்பாடுகள் விரிவாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

காத்திருப்பு போராட்டத்தில் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்கள் கலந்து கொண்டதால், எழிலகம் அதிர்வு கொண்டு, கோட்டை வரை எதிரொலித்தது. காத்திருப்பு போராட்டத்தில் அதிக அளவில் பெண் தோழர்கள் பங்கு கொண்டதோடு, எத்தனை நாளானாலும் கோரிக்கைகள் நிறைவேறாமல் இல்லம் திரும்புவதில்லை என உரைத்தது ஊக்கமும் ஆக்கமுமாக அமைந்தது.

பிற்பகல் 12 மணியளவில் வருவாய் நிருவாக ஆணையர் அவர்களுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடைபெற்று சுமூக தீர்வு எட்டப்படாத நிலையில், பிற்பகல் 2 மணியளவில் அரசுத் தலைமைச் செயலாளர் அவர்களிடமிருந்து பேச்சுவார்த்தைக்கு அழைப்பு வந்தது.

அரசு தலைமைச் செயலாளர் திரு.வெ.இறையன்பு, இ.ஆ.ப. அவர்களுடன் வருவாய்த்துறை அலுவலர்களின் கோரிக்கைகள் குறித்தும், துறையின் நலன் சார்ந்த கோரிக்கைகள் குறித்தும் விரிவாக பேச்சப்பட்டது. நமது கோரிக்கைகள் குறித்து விரைவில் தீர்வு வழங்குவதாக மதிப்பிற்குரிய தலைமைச் செயலாளர் அவர்கள் தெரிவித்தார்கள்.

வருவாய்த்துறை அலுவலர்களின் தொடர் காத்திருப்பு செய்தி அறிந்து அவசரமாக சென்னை வந்தடைந்த மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் மாண்புமிகு கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அவர்கள் மாநில நிருவாகிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தை




TNROA முன்னாள் மாநிலப் பொருளாளர் தோழர் கோ.இளங்கோவன் வாழ்த்துரை

நடத்தினார். வருவாய்த்துறை அலுவலர்களின் வாழ்வாதாரக் கோரிக்கைகள் காலம் தாழ்த்தப்படுவதையும், இதனால் அலுவலர்களின் நலன் கடுமையாக பாதிக்கப்படுவதையும் அமைச்சர் அவர்களிடம் விரிவாக எடுத்துரைத்தோம். அனைத்து கோரிக்கைகளையும் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றுவதாக உறுதியளிக்கப்பட்டதோடு எழுத்துபூர்வமாக கூட்ட முடிவுகள் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து எழிலகத்தின் நுழைவு வாயிலிலேயே மாநில நிருவாகிகள் அவசரக் கூட்டமும், அதனைத் தொடர்ந்து மாவட்ட நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டமும் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக நடைபெற்றது. அதுகாறும் எழிலக வளாகத்திலேயே காத்திருந்த மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் காத்திருப்பு போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டதை அறிந்து நேரடியாக போராட்டக் களத்திற்கு வந்து வருவாய்த்துறை அலுவலர்களின் அனைத்து கோரிக்கைகளும் விரைந்து நிறைவேற்றப்படும் என உறுதியளித்தார்.

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் 59 ஆண்டுகால இயக்க வரலாற்றில் சென்னை ஆணையரக வளாகத்தில் ஆயிரக்கணக்கான வருவாய்த்துறை அலுவலர்கள் கலந்து கொண்ட தொடர் காத்திருப்பு போராட்டம் வரலாற்று சிறப்புடையதாகவும், போராட்ட சரித்திரத்தில் மைல்கல்லாக அமைந்தது.

நமது உணர்வுபூர்வமான இயக்கங்களின் காரணமாக அனைத்து கோரிக்கைகளும் விரைவில் நிறைவேறும் என்ற புதிய நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. 3.8.2023ல் 60வது ஆண்டு வைர விழா ஆண்டின் தொடக்கத்தில் நமது அமைப்பு புதிய பரிமாணத்தை அடைந்துள்ளது!

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களின் பணித்தன்மை மற்றும் பணிப்பளுவை கருத்தில் கொண்டு அனைத்து நிலை அலுவலர்களுக்கும் மேம்படுத்தப்பட்ட ஊதியம், தனி ஊதியம் வழங்க வேண்டும் என்ற ஒற்றை கோரிக்கை வைர விழா ஆண்டில் நிச்சயம் நிறைவேறிட வேண்டும் என்ற சூளுரை ஏற்று பயணம் தொடர்வோம்! ■

# தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் கோரிக்கைகள் குறித்து நடைபெற்ற பேச்சுவார்த்தை

வருவாய் நிருவாகம் மற்றும்
பேரிடர் மேலான்மை ஆணையரகம்:

பணி 6(2)/01/349/2023 நாள்: 10.05.2023

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 10.05.2028 அன்று பிற்பகல் 4.00 மணியளவில் தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் கோரிக்கைகள் குறித்து சங்க பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றது. மேற்படி பேச்சுவார்த்தையின்போது கீழ்க்கண்டுள்ள அலுவலர்கள் மற்றும் சங்க பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்

1) கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர்
2) இணை ஆணையர் (வருவாய் நிருவாகம்)
3) துணை ஆணையர் (வருவாய் நிருவாகம்)

சங்க பிரதிநிதிகள்

1) திரு எம்.பி. முருகையன், மாநிலத் தலைவர்
2) திரு சு.சங்கரலிங்கம், பொதுச் செயலாளர் மற்றும் சங்க நிருவாகிகள்

மேற்படி பேச்சுவார்த்தையின்போது, கீழ்க்காணும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

1) 2003 முதல் 2019ஆம் ஆண்டுகள் வரையிலான திருத்திய துணை ஆட்சியர் பட்டியல் 20.06.2023-க்குள் வெளியிடவும், 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான துணை ஆட்சியர் பதவி உயர்வு பட்டியல் மேற்குறிப்பிட்ட நாளிலிருந்து 30 தினங்களுக்குள் வெளியிடவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2) மாண்பமை உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் நிலையில் ஏற்படும் பணியிறக்கத்தினை தவிர்ப்பதற்கான மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில், மனிதவள மேம்பாட்டுத் துறை செயலாளர் மற்றும் சட்டத்துறை செயலாளர் ஆகியோர்களுடன் மே 15 அல்லது 18ஆம் தேதியில், கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3) காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணியிடங்கள் விரைவில் நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

4) இளநிலை வருவாய் ஆய்வாளர், முதுநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மாற்றம் செய்வது தொடர்பான விதித்திருத்தங்கள் வெளியிட விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒம்/- சு.சிவராசு,

இணை ஆணையர் (வநி)
கூடுதல் தலைமைச் செயலர் /
வருவாய் நிருவாக ஆணையருக்காக

# பசலி ஆண்டு உருவான வரலாறு

இந்த மாதம் முழுவதும் தமிழ்நாட்டு செய்தித் தாள்களில் பரவலாக-ஜமாபந்தி-வருவாய் தீர்ப்பாயம் பற்றிய செய்திகள் வெளிவந்துள்ளன. அந்த செய்திகள் ‘பசலி” ஆண்டு என்ற வார்த்தையும் இடம் பெற்றுள்ளன.

பசலி என்றால் என்ன? பசலி எனும் சொல் உருது, அரபி வார்த்தையாகும். ஆங்கிலத்தில் Harvest தமிழில் அறுவடை. அப்படி எனில் பசலி (Fasil) ஆண்டு என்பது அறுவடை ஆண்டாகும். உண்மையில் இது வேளாண்மை ஆண்டு என்றே பொருள்படும்.

பசலி ஆண்டு 12 மாதங்கள் கொண்டதுதான். ஆங்கில மாதக் கணக்குப்படி பார்த்தால் ஜுலை முதல் ஜுன் வரையிலானது. அதனால்தான் இந்த வேளாண்மை ஆண்டின் நிறைவுக் காலத்துக்கு முன்பாக வேளாண் வருவாய் தொடர்பான பிரச்சனைகள், சிக்கல்களுக்கு தீர்வு ஏற்படுத்துவதற்காக முந்தைய ஆட்சியாளர்களால் ஜமாபந்தி-வருவாய்த் தீர்ப்பாயம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வருவாய் ஆண்டு அல்லது நிலவரி ஆண்டு என குறிப்பிட வேண்டுமென தமிழக அரசு கூறியுள்ளது.

பிரிட்டிஷார்கள் இந்தியாவுக்கு வந்த பிறகு சட்டமன்றங்கள், நாடாளுமன்றம் ஏற்படுத்தப்பட்ட பிறகு, பட்ஜெட் (வரவு-செலவு திட்டம்) சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் பழக்கம் வந்துள்ளதல்லவா? இது நிதி ஆண்டு என்றழைக்கப்படுகிறது. இந்த நிதி ஆண்டு ஏப்ரல் முதல் மார்ச் வரை 12 மாதங்களை கொண்டதாக உள்ளதுதானே.

இந்த நிதியாண்டு நடைமுறை முதலாளித்துவ ஜனநாயக அமைப்புகளான சட்டமன்ற, நாடாளுமன்றங்கள் ஏற்பட்ட பின்னர் வழக்கத்துக்கு வந்தது. அப்படி எனில் இந்த பசலி ஆண்டு - வேளாண் ஆண்டு - அறுவடை ஆண்டு எப்போது நடைமுறைக்கு வந்திருக்கும்? இது உலகம் முழுவதும் உள்ளதா? இந்தியாவில் மட்டும் உள்ளதா?. அறுவடைக்காலம் வருவதற்கு முன் உழவடைக் காலம், சாகுபடிக் காலம் இருக்குமல்லவா? ஆடிப்பட்டம் தேடி விதை என்பதும், தை பிறந்தால் வழி பிறக்கும் என்பதும் தமிழ்நாட்டின் முது மொழிகள் அல்லவா?

ஆடி மாதம் விதைக்க வேண்டும் என்றால் முன் கூட்டியே அதாவது வைகாசி, ஆனி மாதங்களில் நன்செய் நிலமோ, புன்செய் நிலமோ உழவு செய்து விதை விதைப்பதற்கு - நாற்று நடவு செய்வதற்கு தயார்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அப்படிச் செய்து நீர் பாய்ச்சி, உரமிட்டு. களை பறித்து, விளைய வைத்தால்தான் அறுவடைக்கு பயிர் தயாராகும்.

முந்தைய காலங்களில் மானாவாரி (புன்செய்-புஞ்சை) விவசாயமும், பாசனம் ஏற்பட்டுள்ள நன்செய் (நஞ்சை) விவசாயமும் மழை, ஏரி, குளங்கள், கண்மாய்கள், ஆறுகள், கால்வாய்களின் இருப்பைப் பொறுத்தே அமைந்திடும். அதற்கு ஏற்ப ஒரு முறையோ (ஒரு போகம்) இரு முறையோ (இரு போகம்) மும்முறையோ (முப்போகம்) விவசாயம் நடைபெறும். அந்த காலத்தின் பயிரினங்கள் விளைச்சல் கால அளவுகள் நீண்டதாக நான்கு மாதம், ஐந்து மாதம், ஆறு மாதம் கொண்டதாக இருந்தது.

எப்படியாயினும் சித்திரை மாத கோடைக் காலத்தில் கொஞ்சம் ஓய்வு காலமாகவே விவசாயிகளுக்கு அமையும். எனவே அந்தக் காலத்தில் வேளாண் பொருளாதாரத்தின் ஆதாரமான விவசாயிகளின் நிலம் மற்றும் இதர பிரச்சனைகள் தொடர்பான சிக்கல்களை தீர்ப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. முந்தைய ஆட்சிக் காலங்களில். அப்படி என்றால் பிரிட்டிஷாருக்கு முன்னால் இருந்த ஆட்சியாளர்கள் தான் இத்தகைய நடைமுறையை கொண்டு வந்திருக்க முடியும்.

அது நிலப்பிரபுத்துவ - மன்னராட்சி கால நடைமுறையாகவே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும். அப்படி எனில் இது யார் ஆட்சிக்காலத்தில் நடந்திருக்கும்? . இந்தியா தான் ஜனநாயகத்தின் தொட்டில் என்று இன்றைய மோடி வகையறாக்கள் - ஆர்எஸ்எஸ், பாஜக - பரிவாரங்கள்

கூறுகின்றனவே, அப்படி ஏதாவது ஒரு முந்தைய பொற்கால ஆட்சிகளில் கொண்டு வரப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் அப்படி ஏதும் இல்லை.

பின் எப்போது இந்த முறை (பசலி ஆண்டு) நடைமுறைக்கு வந்தது? யாரால் கொண்டுவரப்பட்டது? வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தால், இப்போதுதான் எல்லாம் கூகுளிலும், விக்கிபீடியாவிலும் கிடைக்கிறது என்கிறார்களே, அதன் வழியாகப் பார்த்தால் விஷயம் தெரிய வருகிறது. முகலாய ஆட்சிக் காலத்தில் - மகா அக்பர் காலத்தில் 1556இல் இந்த பசலி ஆண்டு முறை அறிமுகமாகியிருக்கிறது. அந்த காலத்தின் இஸ்லாமிய ஆண்டுக் கணக்கில் 963 AH வருடம். அதுவே இந்து - சம்வாத் ஆண்டுக் கணக்கில் 1612 SE வருடம்.

பசலி என்கிற அரபு வார்த்தைக்கு பிரிவு அல்லது பருவம் என்றும் பொருள். அது இந்தியாவில் பருவ காலத் தொகுப்பை குறிப்பதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கிறது அவர்கள் வழியில், இதில் குறுவை, சம்பா எனும் இரண்டு பருவங்கள் உள்ளன. இந்த பசலி ஆண்டுக் கணக்கு அந்தக் காலத்தில் பெரும்பாலும் வடஇந்தியப் பகுதிகளில் தான் நடைமுறையில் இருந்திருக்கிறது. அப்படி என்றால் தென்னிந்தியப் பகுதிக்கு எப்போது வந்தது? அக்பரின் பேரன் ஷாஜஹான்தான் இங்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார் 1630 (கிபி) இல்.

அது எப்படி? ஹைதராபாத் நிஜாம் மிர் உஸ்மான் அலிகான் மூலமாக அப்படித்தான் ஆந்திரா, கர்நாடகா, தமிழ்நாடு பகுதிகளுக்கு வந்து சேர்ந்தது. நிஜாமின் நிர்வாக நடைமுறை நில வருவாய் மற்றும் நீதித் துறையோடு இணைந்துவிட்டது. அதுதான் தமிழ்நாட்டிலும் நடைமுறையில் உள்ளது.

அறுவடையை ஆதாரமாகக் கொண்ட இந்த காலண்டர் முறை தெற்காசியா முழுவதும் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் தற்போது தக்காணப் பகுதி அதாவது தென்னிந்தியப் பகுதியில் உள்ளது. சரி, இந்த பசலி ஆண்டுக்கும் தற்போதைய ஆங்கில ஆண்டுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? அதை எப்படிக் கணக்கிடுவது அல்லது புரிந்து கொள்வது? பசலி காலண்டர் துவங்குவது 963 ஹிஜ்ரா (AH) வருடம். இது இஸ்லாமிய காலண்டர் அடிப்படையில் உள்ளது. ஏனெனில் அது நிலவு சுழற்சியை (உதிப்பதை தேய்வதை) அடிப்படையாகக் கொண்டது. ஆனால் மற்றவை சூரியச் சுழற்சியை அடிப்படையாகக் கொண்டது அதனால் ஆங்கில காலண்டர் ஆண்டிலிருந்து 590 ஆண்டுகளை கழித்துக் கணக்கிட வேண்டும். அதுதான் பசலி ஆண்டாகும். எடுத்துக்காட்டாக 2000-2001ஆம் ஆண்டில் வந்த பசலி ஆண்டு என்ன? 2000-590=1410.இதுதான் பசலி ஆண்டு. இப்போது நடப்பது 1432ஆம் பசலி ஆண்டு. அதாவது 2022-2023ஆம் நிதியாண்டு நடப்பதால், 2022-590=1432 ஆகும்.

இந்த பசலி ஆண்டை அக்பர் அறிமுகப்படுத்தினார் என்றால் அவர் ஆட்சிக்கு வந்ததுமே அறிமுகப்படுத்திவிட்டாரா? அதாவது 1556இல் இரண்டாம் பானிபட் போரில் அக்பர் வெற்றி பெற்றுத்தான் ஆட்சிக்கு வருகிறார். அக்பர் ஆட்சிக்கு வந்த போது அவருக்கு வயது 13 தான். அதனால் அவரது தாய்மாமன் பைரம்கான் தான் தளபதியாகவும், ஆட்சியாளராகவும் விளங்கினார். அவர் தான் ஹெமுவை பானிபட் போரில் தோற்கடித்தார்.

ஆனால் இந்த நிர்வாக முறைக்கு அவருக்கு முன் ஆட்சியிலிருந்த ஷெர்ஷாதான் காரணம். அவர் சூர் வம்சத்தைச் சேர்ந்தவர். ஆவர் 1540 ஆம் ஆண்டில் முகலாயப் பேரரசை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தார். அவர் 1537இல், அக்பரின் தந்தையான ஹுமாயு+னை தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஷெர்ஷாவின் நிர்வாகத் திறமை அளவிடற்கரியது என்று வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பசலி ஆண்டுக் கணக்கு முகலாயர்களின் நிர்வாக நடைமுறை. ஆனால் இன்றைய ஆட்சியாளர்களோ பத்தாம் பசலித் தனத்தை ஆட்சி நிர்வாகங்களில் புகுத்தி நாட்டை பின்னோக்கி இழுத்துச் செல்ல முயற்சிக்கிறார்கள். வரலாற்றுச் சக்கரம் பின்னோக்கி நகரக் கூடாது.

நன்றி : தீக்கதிர்

# மனதின் வலிமை

"நீ கொடுத்து வைத்தது இவ்வளவுதான்" என்று மற்றவர்கள் நம்மை பார்த்து சொல்வதுண்டு. இந்த வார்த்தையை கேட்டால் நம்மில் பலர் துவண்டு போவதுண்டு. மனதிற்குள் இடி இடித்தது போலவும், வாழ்க்கையே இருண்டுவிட்டது போலவும், தேவதாஸ் காதலில் தோற்று தாடி வைத்து அலைந்தது போல் மாறிவிடுவோம். நமது அரசுப் பணிகளிலும் இது பிரதிபலிக்கும், ஓர் இயக்கம் முன்னெடுக்கும் போராட்டங்களில் பங்கெடுப்பது என்பது தத்தமது வாழ்க்கையை பாதுகாக்கவே என்பதை பலரும் உணராமல் இருப்பதுதான் வேதனை அளிக்கிறது. பிறர் கூறும் வார்த்தைகளில் சிக்கி மனதை வருத்தி அய்யோ போராட்டத்தில் கலந்து கொண்டால் நமது பணி என்னாகும் என்பது போன்ற எண்ணப் போராட்டத்தில் வீழ்ந்து தத்தளிப்பதுண்டு.

இவர்களின் நிலையை என்னவென்று சொல்வதென தமிழ் அகராதியில் வார்த்தைகளை நான் தேடிக்கொண்டிருக்கிறேன். இவர்களைப் போன்றவர்களை நினைத்தால் பருந்து காகம் கதைதான் நினைவுக்கு வருகிறது.

பருந்து பறந்து கொண்டிருக்கிறது. அதன் இலக்கை நோக்கியே அதன் பயணம் சென்று கொண்டிருக்கிறது. திடீரென ஒரு காகம் பறந்து வந்து பருந்தின் மீது உட்கார்ந்து கொண்டு பருந்தின் முதுகினை குத்திக்கொண்டே வருகிறது. பருந்து உயரே மேல்நோக்கி பறக்கிறது. உயரே செல்ல செல்ல காகம் சுவாசிப்பதற்கான பிராணவாயு குறைகிறது. காகம் சுவாசிக்க சிரமப்படுகிறது. பருந்துக்கு சுவாசிப்பதென்பது இயல்பான ஒன்று: மேலும் உயரே செல்லச் செல்ல காகம் சுவாசமின்றி, சுவாசிக்கு வழியின்றி விழுந்து இறந்து விடுகிறது.

இதே போலத்தான் பலர் காகத்தைப் போல் எவனோ ஒருவன் சொன்னதை நம்பி தமது வாழ்க்கையை சீரழித்து கொள்கிறார்கள்.

மரம் பலருக்கு நிழல் தருவது போல், நமக்கு பணிப் பாதுகாப்பும் வாழ்க்கை முன்னேற்றத்திற்கும் மரமாக இருப்பது நமது வருவாய்த்துறை அலுவலர் சங்கம் என்பதை நாம் சற்றே உணரவேண்டும். நாம் நமது நம்பகத்தன்மை மீதே சந்தேகம் கொள்கிறோம்.

உலகம் உன்னதமானது அது நம்மால் பலரை வாழ வைக்கும். அதனை நாம்தான் வாழ வைப்பதில்லை. "சொல்லடி சிவசக்தி என்னை சுடர்மிகு அறிவுடன் ஏன் படைத்தாய்" என்ற பாரதியின் வரிகள்தான் நம் சங்கத்தின் ஊன்றுகோல். பாரதியின் வரிகள் வலிமையானவை. அதனினும் வலிமையானவன் பாரதி, அவனின் வரிகளைவிட மனவலிமை ஆழமானது. எனினும் "எவரேனும் நினைத்தும் பார்ப்பதுண்டோ" என்ற நினைவு மட்டுமே நெஞ்சில் நிற்கிறது.

போராட்டங்கள் நம்மை செம்மைபடுத்துகிறது. மனதனை வலுப்படுத்துகிறது. நம் பணியினை மேன்மேலும் மெருகேற்றுகிறது. சீனாவிற்கு ஒரு மாசேதுங், கியூபாவிற்கு ஒரு ஃபிடல் காஸ்ட்ரோ, வியட்நாமிற்கு ஒரு ஹோசிமின், நம் தமிழ் ஈழ விடுதலைக்கு பிரபாகரன் போன்று நமது பணி பாதுகாப்பிற்கு தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம் என்பதை எவராலும் மறுக்க முடியாது, மறக்கவும் கூடாது.

உறுதி என்பது உணர்வுடன் இருக்க வேண்டும். உணர்வுடன் போராடினால் மட்டுமே நமது உரிமைகளை மீட்டெடுக்க முடியும் என்ற அடிப்படையில் நமது போராட்ட பாதையை நாம் வகுத்துக் கொள்ள வேண்டும்.

சங்கம் என்பது வார்த்தை அல்ல. அது நமது வாழ்க்கை. உலகின் மொழிகளுக்கெல்லாம் தாய் நமது தமிழ்மொழி. அதுபோலத்தான் நமது தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கமும், அனைத்து சங்கங்களுக்கும் தாய் சங்கம் என்பதை நாம் நன்கு அறிந்தவர்கள். எவன் ஒருவன்

போராட்ட களத்தில் பங்கெடுப்பதில்லையோ அவன் ஒருபோதும் நல்வாழ்க்கையை வாழ்வதில்லை. மாறாக அவன் நிச்சயம் வீழ்வான் என்பதுதான் நமது கடந்த கால வரலாறு. வரலாற்றை மறந்தவர்கள் இம்மண்ணில் வாழ தகுதியற்றவர்கள். நம் சங்கத்தை மறந்தவர்கள் சஞ்சலத்தை சந்திப்பார்கள்.

சங்கம் மட்டுமே நமது வாழ்வாதாரம். சங்கம் மட்டுமே நமது மூலதனம். சங்கத் தலைவர்கள் நமது வேர்கள்.

ஏதோ கடமைக்காக செல்கிறோம் என்ற மனநிலை மாற வேண்டும். முழுக்கை சட்டையை மடித்துவிட்டால் கூட ஓர் ஒழுங்கு வேண்டும். நமக்கு இருக்கும் ஒழுங்குதான் நமது மேலதிகாரிக்கு பயத்தை தோற்றுவிக்கும். அதுபோல நமது சங்கத்தின் மீது நாம் வைக்கும் பற்றுதான் ஆட்சியாளர்களை மிரள வைக்கும். சங்கத்தோடு சங்கமிப்போம். மனதை வலிமையாக்குவோம், மனதின் வலிமை, அதுவே இனிமை.

## ஒன்றுபடுவோம், போராடுவோம், வெற்றிபெறுவோம்.

- க.ராஜகுமார்

காஞ்சிபுரம் மாவட்ட செயலாளர்



சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற சங்கக் கொடியேற்று விழாவில்
மாநிலத் துணைத் தலைவர் தோழர் அர்த்தநாரி

**தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்**

*(அரசாணை எண்.2141, பொதுத் (பணி-அ) துறை, நாள் : 6.10.66ன்படி அங்கீகரிக்கப்பட்டது)*

**THE TAMILNADU REVENUE OFFICIALS' ASSOCIATION**

***மாநில மையம்***

*க.எண்.12, கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005*

# மாநில நிர்வாகிகள் கூட்ட முடிவுகள்

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநில நிர்வாகிகள் கூட்டம் 08.06.2023 அன்று காஞ்சிபுரம் மாநகரில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாநிலத் தலைவர் திரு.எம்.பி.முருகையன் தலைமை வகித்தார். பொதுச் செயலாளர் திரு.சு.சங்கரலிங்கம் முன்னிலை வகித்தார். மாநில செயலாளர் திரு.எம்.எஸ்.அன்பழகன் அனுமதி பெற்று இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. இதர மாநில நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர். கூட்டத்தின் முதல் நிகழ்வாக காஞ்சிபுரம் மாவட்டத் தலைவர் திரு.ரமேஷ் அனைவரையும் வரவேற்றார்.

மாநிலத் தலைவர் திரு.எம்.பி.முருகையன் தனது உரையில், கடந்தகால நடவடிக்கைகளில் மாநில மையத்தின் செயல்பாடுகள் திருப்திகரமாக இருப்பதாகவும், குறிப்பாக கடந்த 10.05.2023ல் சென்னை வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தின் முன்பு நடைபெற்ற தொடர் காத்திருப்பு போராட்டம் அரசிடம் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும், இதன் காரணமாக துணை ஆட்சியர் பட்டியல் வெளியிடுதல் உள்ளிட்ட முக்கியக் கோரிக்கைகளில் குறிப்பிடத்தகுந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், தூத்துக்குடியில் நடைபெற்ற மத்திய செயற்குழு கூட்டத்திற்கு பின்பாக அளிக்கப்பட்ட முறையீடுகள் குறித்தும், உயர் அலுவலர்களின் சந்திப்பு குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

மாநிலத் தலைவர் தனது உரையில், தொடர் காத்திருப்பு போராட்டத்தின் விளைவாக கடந்த 16.05.2023 அன்று மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில், மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.ரகுபதி, வருவாய் நிர்வாக ஆணையர், வருவாய்த்துறை செயலாளர், மனிதவள மேலாண்மைத்துறை செயலாளர் மற்றும் சட்டத்துறை செயலாளர் ஆகியோர் அடங்கிய உயர்மட்ட குழுவினருடன் வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற பேச்சுவார்த்தை ஆக்கபூர்வமாக இருந்ததாகவும், இதற்கு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் முன்னெடுக்கப்பட்ட வலுவான பேராட்ட நடவடிக்கைகள்தான் காரணமாக அமைந்தது என்றும் குறிப்பிட்டார்.

மேலும் திருச்சி மாவட்டம், துறையூர் வருவாய் ஆய்வாளர் திரு.பிரபாகரன் என்பவர் மணல் கடத்தலை தடுக்கச்சென்றபோது சில கயவர்களால் கடுமையாக தாக்கப்பட்ட நிகழ்விற்கு காரணமான நபர்களை குண்டர் சட்டத்தின் கீழ் உடனடியாக கைது செய்து நடவடிக்கை எடுத்திட வலியுறுத்தி கடந்த 30,05.2023 அன்று தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் அனைத்து மாவட்ட/ வட்டத் தலைநகரங்களில் மிக எழுச்சியான ஆர்ப்பாட்டம் நடைபெற்றது மிக சிறப்பு வாய்ந்த நிகழ்வென்றும், இந்த ஆர்ப்பாட்டத்தில் அனைத்து மாவட்டங்களிலும் பெருவாரியான உறுப்பினர்கள் எழுச்சியுடன் கலந்துகொண்டதன் விளைவாக இக்குற்றச்செயவில்

ஈடுபட்ட நபர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு காவல்துறை மூலம் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் எஸ்தாபனத்தை வலுப்படுத்துவது குறித்தும், சில மாவட்டங்களில் ஸ்தாபனம் சரியான முறையில் செயல்படாததால் உறுப்பினர்களின் குறைகளை களைவதில் சுணக்கம் ஏற்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு அம்மாவட்டங்களில் ஸ்தாபனத்தை வலுப்படுத்திடும் விதமாக மாநில நிர்வாகிகள் செயல்பட வேண்டியதன் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைத்தார். மேலும் கரூர் மற்றும் கடலூர் மாவட்ட ஆட்சியர்களின் ஊழியர் விரோத போக்கு ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லையென்றும், எனவே மேற்கண்ட மாவட்டங்களில் மாநில மையம் கூடுதல் கவனம் செலுத்தி வருவாய்த்துறை ஊழியர்களின் நலன்களை பாதுகாத்திட உரிய தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் எடுத்துரைத்தார். மேலும் அனைத்து மாவட்டங்களிலும் 2020-ம் ஆண்டிற்கான உறுப்பினர் இணைப்புக் கட்டணம், சங்கக்குரல் சந்தா மற்றும் முந்தைய ஆண்டின் மாநில மைய கட்டட நிதி உள்ளிட்ட நிதி நிலுவைகளை 30.05.2020-க்குள் வசூல் செய்து செலுத்திட மாநில நிர்வாகிகள் உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டுமென்றும் தெரிவித்தார்.

வருவாய்த்துறை அலுவலர்கள் சந்தித்து வரும் பல்வேறு பிரச்சனைகள், பணி நெருக்கடி மற்றும் அனைத்து நிலையிலான பதவி உயர்வில் ஏற்பட்டுள்ள சுணக்க நிலைகள், பிறதுறை நிறுவனங்களில் உள்ள வருவாய்த்துறை அலுவலர்களின் பணியிடங்கள் ஒவ்வொன்றாக பறிபோவதால் வருவாய்த்துறைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு துணைஆட்சியர் பணியிடங்கள் நிரப்பப்படாததால் பணி முதுநிலையில் ஏற்பட்டுள்ள இழப்பு மற்றும் அநேக மாவட்டங்களில் உச்சநீதிமன்ற தீர்ப்பின் காரணமாக துணை வட்டாட்சியர்கள் பணியிறக்கம் செய்யப்பட்டுள்ளதால் மாவட்டங்களில் ஊழியர்களிடையே நிலவிவரும் அசாதாரண சூழ்நிலை மற்றும் பல்வேறு மாவட்டங்களில் நிலவிவரும் ஊழியர் நலன் சார்ந்த பிரச்சனைகள் குறித்தும் மாநிலத் தலைவர் விரிவாக எடுத்துரைத்தார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களுக்கு மேம்படுத்தப்பட்ட ஊதியம் பெறுதல், இளநிலை வருவாய் ஆய்வாளர் / முதுநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மாற்ற விதித்திருத்த அரசாணை பெறுதல், இரவுக் காவலர், மசால்சி மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடங்களை நிரப்பதல், IFHRMS மென்பொருள் குளறுபடியால் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்கள் சந்தித்துவரும் பல்வேறு பிரச்சனைகள், தேர்தல் பிரிவில் பணியாற்றி வந்த தற்காலிக இளநிலை & உதவியாளர் பணியிடங்களை 31.06.023ல் கலைக்கப்பட்டுள்ளதை இரத்து செய்து மீளப்பெறுதல் மற்றும் பேரிடர் மேலாண்மைப் பிரிவில் கலைக்கப்பட்ட முதுநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடங்களை மீண்டும் வழங்கிடக் கோருதல் உள்ளிட்ட வருவாய்த்துறை அலுவலர்களின் வாழ்வாதார கோரிக்கைகளை வென்றெடுத்திட வேண்டியதன் அவசியம் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட/வட்டக்கிளை நிர்வாகிகளுக்கு ஸ்தாபனம் தொடர்பான பயிற்சி அளித்திடுவது தொடர்பாக விரைவில் திட்டமிடப்பட்டு பட்டியல் வெளியிடப்படும் எனவும் தெரிவித்தார்:

பொதுச்செயலாளர் திரு.சு.சங்கரலிங்கம் தனது உரையில், 08.04.2023-ல் தூத்துக்குடி மாநகரில் நடைபெற்ற மாநில நிர்வாகிகள் கூட்டத்திற்கு பின்பாக கடந்த இரண்டு மாத காலத்தில் மாநில மையத்தின் சார்பில் எடுக்கப்பட்டுள்ள கடந்த கால நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைத்தார். குறிப்பாக கடந்த 18.04.2023 அன்று சென்னையில் வருவாய்த்துறை செயலாளர், வருவாய் நிர்வாக ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை ஆணையர் மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் உள்ளிட்ட உயர் அலுவலர்களிடம் தூத்துக்குடி மத்திய செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் முறையீடுகளை வழங்கி

வருவாய்த்துறை அலுவலர்களின் வாழ்வாதார கோரிக்கைகளின் மீது விரைந்து ஆணைகள் வெளியிட வலியுறுத்தப்பட்டது குறித்தும், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளரிடம் நியாயவிலைக் கடைகளை ஒரே துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும்போது மாவட்ட வழங்கல் அலுவலர்/ வட்ட வழங்கல் அலுவலர் உள்ளிட்ட வருவாய்த்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணியிடங்களை குறைத்திடல் கூடாது என்று முறையீடு வழங்கப்பட்டது குறித்தும், மேலும் ஆறு சட்டமன்ற தொகுதிக்கு மேற்பட்ட மாவட்டங்களில் வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்திடும் பணிக்கென துணை ஆட்சியர் பணியிடங்களை வழங்கிடக்கோரி முதன்மைத் தேர்தல் அலுவலரிடம் முறையீடு அளிக்கப்பட்டது குறித்தும் எடுத்துரைத்தார்.

மேலும் கடந்த 28.04.2023 அன்று நில நிர்வாக ஆணையர் அவர்களை சந்தித்து நில எடுப்பு தொடர்பான தற்காலிக பணியிடங்களில் பணிபுரிந்துவரும் அலுவலர்கள் மாதந்தோறும் ஊதியம் பெறுவதில் ஏற்படும் காலதாமதம் குறித்தும், அதனை சரிசெய்திடுமாறும், மேலும் ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியர் பணியிடங்கள் குறைத்திடக்கூடாது என வலியுறுத்தி விரிவாக பேசப்பட்டது குறித்தும் எடுத்துரைத்தார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களின் வாழ்வாத கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் கடந்த 10.05.2023 அன்று 38 மாவட்டங்களிலிருந்தும் 1500-க்கும் மேற்பட்ட வருவாய்த்துறை அலுவலர்கள் கலந்து கொண்ட தொடர் காத்திருப்பு போராட்டம் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க போராட்ட வரலாற்றில் ஒரு மைல்கல்லாக அமைந்தது என்றும், இப்போரட்டத்தின் விளைவால் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் போராட்ட களத்திற்கே நேரிடையாக வந்து ஊழியர்கள் மத்தியில் உறுதிமொழி அளித்ததன் காரணமாக நமது வாழ்வாதார கோரிக்கைகளில் சில முக்கியமான கோரிக்கைகள் இம்மாத இறுதிக்குள் நிறைவேறும் நல்லதொரு சூழல் ஏற்பட்டுள்ளது என்றும் விரிவாக எடுத்துரைத்தார்.

காத்திருப்பு போராட்டத்தின் போது அரசு மட்டத்தில் அளிக்கப்பட்ட உறுதிமொழியின் அடிப்படையில் கடந்த 16.05.2023 அன்று மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர் இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில், மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.ரகுபதி, வருவாய் நிர்வாக ஆணையர், வருவாய்த்துறை செயலாளர், மனிதவள மேலாண்மைத்துறை செயலாளர் மற்றும் சட்டத்துறை செயலாளர் ஆகியோர் அடங்கிய உயர்மட்ட குழுவினருடன் வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் கடந்த மூன்று ஆண்டுகளாக வெளியிடப்படாமல் உள்ள துணை ஆட்சியர் பட்டியலை உடன் வெளியிடுதல், பட்டதாரி அல்லாத அலுவலர்களின் பதவி உயர்வினை உத்திரவாதப்படுத்தி அரசாணை வெளியிடுதல் மற்றும் கடந்த 16.08.2022 மற்றும் 01.11.2022 ஆகிய தேதிகளில் அரசு மட்டத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் ஏற்கப்பட்ட அனைத்து கோரிக்கைகளையும் விரைவில் நிறைவேற்றிடுமாறு மாநில மையத்தின் சார்பில் விரிவாக வலியுறுத்தப்பட்டதன் விளைவாக நமது வாழ்வாதார கோரிக்கைகள் சிலவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்றும், இதற்கு காரணம் நமது அமைப்பின் சார்பில் முன்னெடுக்கப்பட்ட வலுவான இயக்க நடவடிக்கைகளே என்றும் உறுதிபட தெரிவித்தார்.

கடந்த 24.05.2023 அன்று சென்னையில் உயர் அலுவலர்களை மீண்டும் சந்தித்து கடந்த 16.05.2023 அன்று நடைபெற்ற அரசு மட்டத்திலான பேச்சுவார்த்தையில் உறுதியளித்தபடி வருவாய்த்துறை அலுவலர்களின் வாழ்வாதார கோரிக்கைகளின்மீது விரைந்து நடவடிக்கை

மேற்கொண்டு ஆணைகளை வழங்கிட வலியுறுத்தப்பட்டது குறித்தும், மேலும் வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் பணிக்கென நேர்முக உதவியாளர் (தேர்தல்) பணியிடங்களை உடனடியாக வழங்கிடக் கோரி முறையீடு அளிக்கப்பட்டுள்ளது குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

திருச்சி மாவட்டம், துறையூர் வருவாய் ஆய்வாளர் திரு.பிரபாகர் என்பவர் மணல் கடத்தலை தடுக்க சென்ற போது சில சமூக விதோதிகளால் கடுமையாக தாக்கப்பட்டதற்கு விரைவான நடவடிக்கை எடுத்திட வலியுறுத்தி தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் அனைத்து மாவட்ட/வட்ட தலைநகரங்களில் நடத்தப்பட்ட எழுச்சியான ஆர்ப்பாட்டத்தின் காரணமாக இச்செயலுக்கு காரணமான சமூக விரோதிகள் உடனடியாக கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், கடந்த 20 நாட்களில் மாநிலம் தழுவிய அளவில் எழுச்சியான இரண்டு கட்ட போரட்டங்களை நடத்திடும் சக்தி நமது சங்கத்திற்கு மட்டுமே உள்ளது என்றும் தெரிவித்தார்.

மாநில பொருளாளர் திரு.வெ.சோமசுந்தரம் நடப்பாண்டிற்கான உறுப்பினர் இணைப்புக் கட்டணம், சங்கக்குரல் சந்தா, கட்டட நிதி, சேலம் மாநாட்டு நிதி, மாநில மைய காலண்டர் நிதி மற்றும் TNGEA மாநாட்டு நிதி உள்ளிட்டவற்றை தாக்கல் செய்து, வரவு செலவு விவரங்களை அடுத்த கூட்டத்தில் தாக்கல் செய்வதாக தெரிவித்தார்.

அனைத்து மாநில நிருவாகிகளின் செழுமையான கருத்துக்கள் மற்றும் ஆக்கபூர்வமான விவாதங்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட முடிவுகள் ஒரு மனதாக எடுக்கப்பட்டன.

1) தமிழகம் முழுவதும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் 2009ம் ஆண்டு முதல் துணைவட்டாட்சியர் பட்டியல்கள் திருத்தம் செய்வதில், எந்தவொரு அலுவலருக்கும் பணியிறக்கம் ஏற்படாத வகையில் துணை வட்டாட்சியர் பதவி உயர்வு வழங்கிட ஏதுவாக அரசு மட்டத்தில் உறுதியளித்தபடி உரிய ஆணைகளை உடன் வழங்கிடுமாறு தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவுசெய்யப்பட்டது.

2) தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் பெரும் முயற்சியின் காரணமாக இளநிலை உதவியாளர், உதவியாளர் ஆகிய பணியிடங்களை முறையே இளநிலை வருவாய் ஆய்வாளர், முதுநிலை வருவாய் ஆய்வாளர் என பெயர் மாற்றம் செய்து 2016-ம் ஆண்டில் அரசாணை வெளியிடப்பட்டு 7 வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இதுவரை விதித்திருத்தம் வெளியிடப்படாததால் அரசாணையினை நடைமுறைப்படுத்திட இயலவில்லை. எனவே இதில் மேலும் காலம் தாழ்த்தாது ஒரு மாத காலத்திற்குள் உரிய விதிதிருத்த அரசாணை வெளியிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

3) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் பணிபுரிந்துவரும் அலுவலர்கள் இயற்கை சீற்றம், சட்டம்/ஒழுங்கு பராமரித்தல், முக்கிய பிரமுகர்கள் வருகை, பல்வேறு வகையிலான நலத்திட்ட உதவிகளை பொதுமக்களுக்கு வழங்குதல் மற்றும் சட்டமன்ற/ பாராளுமன்ற தேர்தல் பணிகள் உள்ளிட்ட அதிமுக்கியமான பணிகளை இரவு/பகல் பாராது விடுமுறை தினங்களில்கூட தொடர்ந்து 24 மணிநேரமும் மேற்கொண்டு வருகின்றனர். எனவே இவர்களின் பணிப்பளு மற்றும் பணித்தன்மையினை கருத்தில் கொண்டு அனைத்து நிலை வருவாய்த்துறை அலுவலர்களுக்கும் மேம்படுத்தப்பட்ட ஊதியம் மற்றும் தனி ஊதியம் வழங்கிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

4) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் கடந்த நான்கு ஆண்டுகளாக துணை ஆட்சியர் பதவி உயர்வு பட்டியல் வெளியிடப்படாததால் பல்வேறு துணை ஆட்சியர் நிலையிலான பணியிடங்கள் காலியாகவும், சில பணியிடங்கள் பறிபோகும் நிலையும் உருவாகியுள்ளது. இதனால் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலை வரை பதவி உயர்வில் மிகுந்த தேக்கநிலை ஏற்பட்டுள்ளது.

இதனை கருத்தில் கொண்டு துணை ஆட்சியர் பதவி உயர்வு பட்டியலை உடன் வெளியிடுமாறு தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

5) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் உள்ள அலுவலக உதவியாளர் பணியிடங்களை நிரப்பிடுவது குறித்து தமிழக அரசால் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள இரண்டு கடிதங்களின் அடிப்படையில் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களை வலியுறுத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

6) மணல் கடத்தலை தடுக்கச் சென்று திருச்சி மாவட்டம், துறையூர் வருவாய் ஆய்வாளர் திரு.பிரபாகர் என்பவரை தாக்கிய நபர்கள் மீது குண்டர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கவும். ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்திடவும், பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களை அரசுடைமையாக்கி ஏலம் விடுவதற்கு நடவடிக்கை எடுத்திடுமாறு திருச்சி ஆட்சியரிடம் வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளின் மீது குறிப்பிட்ட வரையறைக்குள் நடவடிக்கை மேற்கொள்ள தமிழக அரசை வலியுறுத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

7) மாவட்ட வருவாய் அலகுகளிலிருந்து ஒருவழி/ இருவழி மாவட்ட மாறுதல் கோரி அனுப்பப்பட்டுள்ள முன்மொழிவுகள் வருவாய் நிர்வாக ஆணையரகத்தில் நிலுவையில் உள்ளன. மேலும் முதுநிலை வருவாய் ஆய்வாளர், இளநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் தட்டச்சர் ஆகிய நிலைகளில் மாவட்ட மாறுதல் கோரி அனுப்பப்படும் முன்மொழிவுகளை பரிசிலனை செய்து ஆணைப் பிறப்பித்திட கால தாமதம் ஏற்படுகிறது. இதனால் மாவட்ட மாறுதல் கோரி விண்ணப்பித்துள்ள வருவாய்த்துறை அலுவலர்கள் மிகுந்த மனச்சோர்வுடன் பணிபுரிந்து வருகின்றனர். எனவே வருவாய்த்துறையில் மாவட்ட மாறுதலுக்கு பரிந்துரை செய்து மாவட்ட ஆட்சியர்களால் அனுப்பப்பட்டுள்ள முன்மொழிவுகளை பரிசீலனை செய்து காலதாமதமின்றி உடனடியாக ஆணை வழங்கிடுமாறு வருவாய் நிருவாக ஆணையரை வலியுறுத்துவதேன முடிவு செய்யப்பட்டது.

8) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் தற்போது மிகுந்த பணி நெருக்கடியுடன் அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் பல்வேறு சான்றிதழ்கள் கோரி மிகுதியான அளவில் மனுக்கள் வருவதால் அவற்றினை முடிவு செய்வதில் ஏற்படும் காலதாமதத்தினை சரி செய்திடும் வகையில் பொது மக்களின் நலன் கருதி "முதல்வரின் முகவரி" மற்றும் பொது மக்களுக்கான சான்றிதழ் வழங்கிடும் பணிக்கென அனைத்து வட்டத்திற்கும் தலா ஒரு சிறப்பு துணை வட்டாட்சியர் பணியிடம் வழங்கிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

9) கிராம நிர்வாக அலுவலர்களின் பதவி உயர்வு பணி முதுநிலை தொடர்பாக சுமூகமான தீர்வினை விரைவில் ஏற்படுத்த வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் தமிழக அரசை வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

10) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் ஒப்பளிக்கப்பட்டுள்ள 2024 தற்காலிக பணியிடங்களில் பணிபுரிந்து வரும் அலுவலர்கள் மாதந்தோறும் ஊதியம் பெறுவதில் பல்வேறு சிரமங்கள் ஏற்படுகிறது. இதனைக் களைந்திடும் விதமாக மாதந்தோறும் கொடுப்பாணை வழங்கிடும் நடைமுறையினை இரத்து செய்திடுமாறும், மேலும் தற்காலிக பணியிடங்களை மறுசீரமைத்தி தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ள குழுவிலிருந்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறைக்கு விலக்கு அளித்திடுமாறும் தமிழக அரசை வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது. மேலும், IFHRMS SERVER திறன் உடன் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் என்றும், இதன் திறன் சீராகும்வரை இத்திட்டத்தை தற்காலிகமாக நிறுத்திவைத்திட நிதித்துறை செயலாளரை வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

11) புதுக்கோட்டை மாவட்ட வருவாய் அலகில் கடந்த 04.04.2012 அன்று முதுநிலை வருவாய் ஆய்வாளர் பட்டியல் வெளியிடப்பட்டது. அதிகளவில் காலிப் பணியிடம் இருந்தும் உரிய காலத்தில் பதவி உயர்வு வழங்கப்படவில்லை. இதனால் பட்டியலில் இடம்பெற்றிருந்த அலுவலர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே இதனை சரிசெய்திட கோரி புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரால் அனுப்பப்பட்ட முன்மொழிவு அரசிடம் கடந்த ஓராண்டிற்கு மேலாக நிலுவையில் உள்ளது. இதனை மேலும் காலம் தாழ்த்தாது உடனடியாக முடிவு செய்து உரிய வழங்கிடுமாறு வருவாய்த்துறை செயலாளரை வலியுறுத்துவது முடிவு செய்யப்பட்டது.

12) ஒருங்கிணைந்த முதுநிலை வருவாய் ஆய்வாளர் பட்டியலில் முதுநிலை நிர்ணயித்துள்ளது தொடர்பாக தேனி, மதுரை மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த வருவாய்த்துறை அலுவலர்களை நேரடி விசாரணை மேற்கொண்டு, வருவாய் நிருவாக ஆணையர் அவர்களால் அனுப்பப்பட்டுள்ள முன்மொழிவு கடந்த ஓராண்டாக அரசிடம் நிலுவையில் உள்ளது. இதன் மீது விரைந்து நடவடிக்கை எடுத்து உரிய ஆணைகள் விரைவில் பிறப்பிக்க தமிழக வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

13) 2022-2023ஆம் ஆண்டிற்கான வருவாய் அலுவலர் காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை (Estimate of Vacancy) குறைவாக மதிப்பீடு செப்யப்பட்டுள்ளதை ஆய்வு செய்து சரியான எண்ணிக்கையில் திருத்திய காலிப்பணியிட மதிப்பீட்டறிக்கை வெளியிட்டு பதவி உயர்வு அளித்திட உரிய நடவடிக்கை எடுத்திடுமாறு பொதுத்துறை செயலாளர் மற்றும் அரசு தலைமைச் செயலாளர் அவர்களை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

14) வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்திடும் பணிக்கு ஆறு சட்டமன்ற தொகுதிகளுக்கு மேற்கண்ட மாவட்டங்களில் நேர்முக உதவியாளர் (தேர்தல்) பணியிடங்கள் ஏற்படுத்திடக்கோரி தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

15) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் தேர்தல் பிரிவில் பணியாற்றி வந்த தற்காலிக இளநிலை உதவியாளர் பணியிடங்களை எவ்வித முள்ளறிவிப்புமின்றி 31.05.2023-வுடன் கலைத்து ஆணையிடப்பட்டுள்ளது. இதனால் தமிழகம் முழுவதும் இப்பணியிடத்தில் பணிபுரிந்த 81 நபர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து பரிதவித்து வருகின்றனர். எனவே இவர்களின் வயது, குடும்ப சூழல் மற்றும் வாழ்வாதாரத்தினை கருத்தில் கொண்டும், 2024 நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் மிக விரைவில் தொடங்கப்படுவதை கருத்தில் கொண்டும், கலைக்கப்பட்ட பணியிடங்களை மீண்டும் ஏற்படுத்திட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

16) மாவட்ட பேரிடர் மேலாண்மைப்பிரிவில் முறையே தலா ஒரு வட்டாட்சியர், முதுநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகிய மூன்று பணியிடங்கள் மட்டுமே ஒப்பளிப்பு செய்யப்பட்டு பேரிடர் மேலாண்மைத் தொடர்பான அனைத்து பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்நிலையில் இப்பிரிவில் செயல்பட்டு வந்த ஒரு முதுநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகிய பணியிடங்கள் எவ்வித முன்னறிவிப்புமின்றி கடந்த 31.03.2023-வுடன் கலைக்கப்பட்டுவிட்டதால் மேற்கண்ட பிரிவில் தற்போது ஒரு வட்டாட்சியர் மட்டுமே மிகுந்த பணிச்சுமையுடன் அனைத்து பணிகளையும் மேற்கொண்டு வருகிறார். இதனால் அரசுக்கு உடனுக்குடன் அறிக்கை அனுப்புவதில் மிகுந்த காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. எனவே பேரிடர் மேலாண்மைப்பிரிவின் முக்கியத்துவம் கருதி கலைக்கப்பட்ட இரண்டு பணியிடங்களையும் மீண்டும் ஏற்படுத்திட தமிழக அரசினை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

17) தமிழகத்தில் செயல்பட்டுவரும் வெளிநாட்டு மதுபானம் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் மற்றும் வடிப்பக ஆலைகளில் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற உற்பத்தித் திறனின் அடிப்படையில் கலால் மேற்பார்வை அலுவலர்/ துணை வட்டாட்சியர் உள்ளிட்ட பணியிடங்கள்

மிக குறைந்த அளவில் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆனால் முன்னர் நடைபெற்ற மதுபான உற்பத்தியைவிட தற்போது பன்மடங்கு கூடுதலான அளவில் உற்பத்தி நடைபெறுவதால் அங்கு பணிபுரியும் வருவாய்த்துறை அலுவலர்களின் பணிப் பளுவினை கருத்தில் கொண்டும், தவறான பயன்பாடுகளை தடுத்திடும் வகையிலும், கூடுதலாக செய்யப்பட்டு வரும் உற்பத்தித் திறனிற்கேற்ப புதிய வட்டாட்சியர்/ துணை வட்டாட்சியர் பணியிடங்களை கூடுதலாக ஏற்படுத்திட உள்துறை செயலாளர் அவர்களை வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

18) கொரோனா பெருந்தொற்றின் காரணமாக மூன்றாண்டுகளைக் கடந்தும் தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்திட இயலாத அலுவலர்களின் தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்து ஆணையிடுவதற்கு அனுப்பப்பட்ட கருத்துருக்கள் மீது விரைவாக ஆணைகள் பிறப்பித்திட தமிழக அரசினை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

19) 16.08.2022 மற்றும் 01.11.2022 மற்றும் 16.05.2023 ஆகிய தேதிகளில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற அரசு மட்டத்திலான பேச்சுவார்த்தையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் அனைத்து கோரிக்கைகளையும் மேலும் காலம் தாழ்த்தாது உடனடியாக நிறைவேற்றிடுமாறு தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

20) தமிழக முதலமைச்சர் அவர்களின் தேர்தல் வாக்குறுதியான பங்களிப்பு ஓய்வூதியத்தை இரத்து செய்தல், ஈட்டிய விடுப்பு, சரண் ஊதியம் வழங்குதல் மற்றும் வெளிமுகமை (outsourcing) முறையை கைவிட தமிழக அரசை வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

21) தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தை மேலும் வலுப்படுத்திட அனைத்து மாவட்டங்களிலும் உறுப்பினர் இணைப்பு கட்டணம், சங்கக்குரல் சந்தா ஆகியவற்றை 100% நிறைவு செய்து 30.06.2023-க்குள் செலுத்திட அனைத்து மாவட்டங்களையும் வலியுறுத்துவதெனவும், மேலும், சென்னை தலைமையக கட்டட நிதி நிலுவை, சேலம் கோரிக்கை மாநாடு பங்களிப்பு நிதி, அரசு ஊழியர் சங்க மாநாடு நிதி மற்றும் 2022-ம் ஆண்டிற்கான TNROA நாட்காட்டி நிதி உள்ளிட்ட நிலுவை இனங்களை மிக விரைவில் செலுத்திடுமாறு மாவட்ட மையங்களை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

22) மாவட்ட மையத் தேர்தலை நடத்தாமல் உள்ள மாவட்ட மையங்கள் உடனடியாக தேர்தலை ஜனநாயக முறையில் நடத்திட வலியுறுத்துவது எனவும், இராமநாதபுரம் மையத்திற்கான தேர்தலை மாவட்ட நிர்வாகிகள் உறுதி அளித்தபடி ஜனநாயக முறையில் உடன் நடத்திடவும், மேலும், தமிழகத்திலுள்ள 313 வட்டக் கிளைகளிலும் நிர்வாகிகளை தேர்வு செய்து புனரமைக்க உரிய நடவடிக்கை எடுப்பதென முடிவு செய்யப்பட்டது.

இறுதியாக, மாநில பொருளாளர் திரு.வெ.சோமசுந்தரம் குறுகிய காலத்தில் மாநில நிர்வாகிகள் கூட்டத்தை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்த காஞ்சிபுரம் மாவட்ட நிர்வாகிகளுக்கும், கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.

| | |
|---|---|
| ஒம்/- | ஒம்/- |
| (சு.சங்கரலிங்கம்) | (எம்.பி.முருகையன்) |
| பொதுச் செயலாளர், | மாநிலதலைவர் |
| 82207 61781 | 98432 64332 |

பெறுதல்

மாவட்டத் தலைவர், மாவட்டச் செயலாளர், மாவட்ட பொருளாளர் மற்றும் மத்திய செயற்குழு உறுப்பினர்கள், அனைத்து மாவட்டங்கள்.

நகல்: அனைத்து மாநில நிர்வாகிகள் ■

# Inter-caste marriages in need of more Govt. support

Caste is the greatest disease that has plagued Indian society for centuries, detrimental to India's progress, democracy, equality, and fraternity. The birth-oriented caste system determines the people's occupations, marital relationships, and the way they confront social inequality. Untouchability, the hideous form of casteism, degrades the dignity of human beings. It destroys the very human essence. Inter-caste marriages can play an important role in eradicating the intrinsically harmful caste menace.

**Origin and mode of operation**

Caste is a system created for the exploitation of labour. Castes sprang from various divisions of labor which arose following the development of production tools and implements, said Karl Marx. "Caste is not only the division of labour but also the division of labourers," said Ambedkar.

Endogamous marriages within the same caste, caste-based hereditary occupations, absence of co-dining, rituals, customs, mores, caste-based puritanism, and purity have contributed a lot to the sustenance of the caste system. But Indian society still holds aloft an obsolete system as a mirage is mistaken for water.

**Will caste be eliminated?**

The caste system rooted in the production methods, which emerged at a particular point of time in India, cannot sustain itself forever. Caste functions as the fulcrum of production-linked relationships as humans engage with production.

It is the people of the upper caste Hindus who are proprietors of production means, that is, lands, enterprises etc. And it is the people at the lowest rung of the caste society, dispossessed of land and property, who contribute in terms of physical labor to production. The owners of production units get their chance from the caste system to exploit the labourers. So the social evil still sustains as a production-linked network of relations. At the same time caste dominates the public consciousness as a theoretical awareness too. Hence there is a need to bring about changes in the production-linked relations, production means, and in the people's mindset as well.

**The caste system being demolished**

Production instruments, human labour, and science and technology are called forces of production which have, of late, grown by leaps and bounds. That is, there is a plenty of organizations, industrial, service-oriented, educational, scientific and technological, and I-T. As a result, job opportunities have also ratcheted up. The reservation system has benefited the marginalized and the oppressed insofar as they get opportunities in education and jobs. This fuels changes in production-linked relations. Big entrepreneurs have emerged even among the people of oppressed communities. Middle classes and upper middle classes have appeared cutting across all castes. That is to say, the feudalistic production-linked relations, the womb of casteism, have started undergoing changes. This has led to the slow demolition of the casteist structure.

A situation has arisen wherein there are several occupational categories in a single community and there are people of various communities working in a single category of industries.

Consequently, there are chances galore for men and women from different castes to work in an environment bereft of inequalities. All said and done, caste consciousness is still persisting. The silver lining is that the situation wherein caste was class and class was caste, which was in force a few centuries ago, is now slowly getting obsolete. The workers' united and coordinated initiatives have replaced casteist sentiments with class sentiments. This facilitates the prevalence of inter-caste marriages. Yet this is hardly enough. The inter-caste marriages will go on in plenty unabated only in an egalitarian society where all will get all things equitably. That will complete the process of caste elimination.

The belief that the caste menace can be eliminated only if religions, mythologies, gods etc. are totally eliminated has not helped much pragmatically. Scores of people soaked in Hinduism and mythologies are getting married beyond the pale of casteism. Films, social media, campaigns against casteism, struggles, and progressive art and literary works have contributed a great deal to inter-caste marriages. So, a Hindu religion sanitized of the evil of caste is possible.

The factors conducive to inter-caste marriages are friendly manwoman interactions in educational institutions and workplaces and economic self-reliance. However, families awash with undemocratic and male chauvinistic values are still functioning as guardians of the caste system. Even religious conversion has not helped much in elimination of castes.

**Encouragement needed**

Ambedkar's statement, "I believe that inter-caste marriage is the only way to eliminate castes. The fusion of various blood will create a feeling that all people are ours," assumes significance. The caste-based hereditary occupations and cultures unique to various castes have begun to get demolished. All factors favorable to the existence of castes are also being knocked out. Importantly, the rigid system of endogamy has started getting loosened. In several states, 20 percent of marriages are inter-caste marriages. This trend must be encouraged. Besides, social and economic security must be provided to the couples of inter-caste marriage and their families.

**The things Govt. must do**

New legislation must be brought in to curb honor killings committed in the name of caste. The government must perform inter-caste marriages free of cost. Government jobs must be given and financial aid increased to one of the spouses of inter-caste marriage. One-third of the houses in the 'Periyar' samathuvapurams must be earmarked for those couples.

Stringent action must be taken against the officials, police, registrars, caste associations, and political leaders who are working overtime to prevent inter-caste marriages. State-level and district-level mechanisms must be created to address the grievances of the inter-caste couples.

The factors behind the low rate of inter-caste marriages in Tamil Nadu must be found out and weeded out.

**Need for reservation**

On the basis of the Justice Venkatachalaiah Committee's recommendations, if one of the spouses of an inter-caste couple happens to belong to one of the SC or ST communities, their children must be categorized as 'casteless' and given 0.5 percent reservation which can be increased, depending on their percentage. Reservation must also be extended even to other inter-caste marriages. As inter-caste marriages increase, the reservation system for inter-caste marriages must be raised add the general caste-based reservation in vogue should gradually be edged

out. Former Chief Minister M. Karunanidhi said during a discussion on the reservation needed for inter-caste marriages that a legal amendment was necessary in this regard.

Now, owing to the Supreme Court's favorable verdict on the reservation for the economically weaker sections (EWS), a situation has arisen wherein the government can increase the reservation beyond the existing 69 percent. The government should introduce a law on reservation for the children born in inter-caste marriages and that will be appropriate to the ongoing birth centenary fete of Karunanidhi. ■



விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணைநல்லூர் வட்டத்தில் புதிய கல்வெட்டு திறந்து சங்கக்கொடி ஏற்றி பொதுக்குழுவில் கலந்துக்கொண்டு சிறப்பு செய்த TNROA மாநிலப் பொதுச் செயலாளர் தோழர் சு.சங்கரலிங்கம்



கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் வட்டத்தில் மாநிலச் செயலாளர் செந்தில்குமார் பரப்புரை

# பள்ளிக் கல்வி: எதிர்காலச் சவால்களை எதிர்கொள்வது எப்படி?

இன்றைக்கு ஆரம்பக் கல்வி படித்துக்கொண்டிருக்கும் மாணவர்களில் மூன்றில் இருவர் எதிர்காலத்தில், தற்போது நடைமுறையில் இல்லாத, என்னவென்றே தெரியாத, இனிமேல் புதிதாக உருவாகும் துறைகளில்தான் வேலை பார்க்கப்போகிறார்கள். அந்த அளவுக்கு இன்றைய காலகட்டத்தில் டிஜிட்டல், செயற்கை நுண்ணறிவு போன்றவை துரிதகதியில் வளர்ச்சியடைந்துவருகின்றன. இது மாணவர்களை எதிர்காலத்துக்கு எப்படித் தயார்ப்படுத்துவது என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. இதன் காரணமாகப் பல நாடுகள் பள்ளிக் கல்வியில் சீரிய கவனம் செலுத்தத் தொடங்கியிருக்கின்றன. இந்தச் சூழலில், பள்ளிக் கல்வித் துறை பல முக்கிய அம்சங்களை முன்னெடுக்க வேண்டிய அவசியம் உருவாகியிருக்கிறது.

மாற்றமும் வளர்ச்சியும்: மறுமலர்ச்சிக் காலத்துக்குப் பின், குறிப்பாக மத அமைப்புகளின் பிடியிலிருந்து விடுபட்டு, அறிவியல் பரவத் தொடங்கிய பின்னர், 18ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 19ஆம் நூற்றாண்டிலும் மேலை நாடுகளில் ஏற்பட்ட தொழிற்புரட்சியின் விளைவாக வேலைவாய்ப்புகள் பெருகின. அதற்குத் தக்கவாறு மக்களைத் தயார்ப்படுத்த, கல்வி பரவலாகி, எல்லாருக்கும் பொதுவாக ஆனது.

அறிவியலிலும் கணிதத்திலும் நிபுணத்துவம்பெறும் வகையில் கல்வி முறை உருவாக்கப்பட்டது. உலகெங்கும் மக்களாட்சி பரவத் தொடங்கியதும் அதே காலகட்டத்தில்தான். இதன் பலனாக, மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் சமூக முதலீட்டில் பெருமளவு கவனம் செலுத்தப்பட்டது. பள்ளிக் கல்வியில் செலுத்தப்படும் முதலீடு மக்களிடையே சமத்துவத்தை ஏற்படுத்தக்கூடியதாகவும் கருதப்பட்டது. அது இன்றைக்கும் தொடர்கிறது.

‘குழந்தைகளின் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு, பள்ளிக் கல்வியில் செய்யப்படும் முதலீடு, ஒட்டுமொத்தச் சமூகத்துக்கு நீண்ட காலத்துக்கு நன்மை பயக்கிறது’ எனப் பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுவதன் பின்னணி இதுதான்.

நாமும் கடந்த நூறாண்டுகளாகத் தமிழ்நாட்டில் இதைக் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம். பள்ளியை நோக்கி மாணவர்களை ஈர்க்கும் வகையில் மதிய உணவு, இலவச சைக்கிள், மடிக்கணினி போன்ற திட்டங்களை நமது அரசுகள் செயல்படுத்தி வந்துள்ளன. இதன் விளைவாக, தமிழ்நாடு கல்வி வளர்ச்சியில் முன்னேற்றம் கண்ட மாநிலமாகத் திகழ்கிறது. அரசுப் பள்ளிகளில் மாணவர்கள்சேர்க்கைக்குக் கூட்டம் அலைமோதுகிறது. அதேநேரத்தில், கடந்த இருநூறு ஆண்டுகளாகப் பயன்பாட்டில் இருக்கும் கல்வி முறை இனிவரும் காலத்துக்குப் பொருந்துமா என்கிற கேள்வியும் தற்போது எழுந்துள்ளது.

பாடக் கல்விக்கு அப்பால்... மாறிவரும் இன்றைய சூழலில், பள்ளிக் கல்வியில் பெரும் மாற்றங்கள் தேவைப்படுகின்றன. மதிப்பெண்களை மட்டுமே நோக்கமாகக் கொண்ட கல்வியைவிட்டு விலகி, ஆழ்ந்த அறிவையும் திறன்களையும் வளர்க்கக்கூடிய கல்வியைக் கட்டமைக்க வேண்டிய கட்டாயம் உருவாகியிருக்கிறது. இந்தியாவிலும் அமெரிக்காவிலும் மிகப்பெரிய மென்பொருள் நிறுவனம் நடத்திவரும் தொழிலதிபர் கணேஷ் கோபாலனோடு நிகழ்ச்சி ஒன்றில் உரையாடியபோது, அவர் சொன்ன செய்தி மிக முக்கியமானது.

சில ஆண்டுகளுக்கு முன்பு மாநில அளவில் முதலாவதாகத் தேர்ச்சி பெற்ற ஒருவர், பொறியியல் பட்டம் முடித்துவிட்டுப் பணிக்கான நேர்முகத் தேர்வில் கலந்துகொண்டபோது அதில்

மோசமாகத் தோல்வியுற்றார். அதேவேளை, பொறியியல் படிப்பு படிக்காத - இளங்கலைப் பட்டதாரி ஒருவர் எளிதாகத் தேர்ச்சிபெற்றார். தர்க்கரீதியான சுயசிந்தனையுடன், கற்பனை வளமும் படைப்பாற்றலும் கொண்டிருந்ததுதான் அவரது வெற்றிக்கு வழிவகுத்தது.

மனிதன் மற்ற உயிரினங்களிலிருந்து தன்னை வேறுபடுத்திக்கொண்டதற்கு மிக முக்கியக் காரணம், அவனுடைய கற்பனை வளம். கற்பனையில் விளைந்ததைச் சக மனிதர்களிடம் புனைவாகச் சொல்லக்கூடிய வல்லமைதான் மனிதனைத் தனித்தன்மை கொண்ட உயிரினமாக மாற்றியது என்று 'சேப்பியன்ஸ்' புத்தகத்தில் யுவால் நோவா ஹராரி கூறியுள்ளார். கல்வி எனப்படுவது குழந்தைகளின் மூளைக்குள் செய்திகளைத் திணிப்பதல்ல. அது, அவர்களின் அறிவைத் தூண்டும் கருவி. அதற்கு ஆசிரியர்களின் பங்கு இன்றியமையாதது.

ஆசிரியர்களின் முக்கியத்துவம்: உலக அளவில் பள்ளிக் கல்வியில் முன்னணியில் உள்ள நாடு பின்லாந்து. நீண்ட கால உத்தி சார்ந்த திட்டங்களின் காரணமாகக் கடந்த 40 ஆண்டுகளில் இவ்வளர்ச்சியை அந்நாடு அடைந்துள்ளது. அந்நாட்டில் ஆசிரியர் பணியில் சேர்வது கடினமானது. ஒருவர் ஆசிரியராக வேண்டும் என்றால், அந்நாட்டின் எட்டு பல்கலைக்கழகங்களில் ஒன்றில் பட்ட மேற்படிப்பு படித்திருக்க வேண்டும். நுட்பமான பாடத்திட்டம், தீவிரப் பயிற்சி ஆகியவற்றுக்குப் பின்னரே ஆசிரியர் என்று அந்நாட்டில் தகுதி அளிக்கப்படுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, ஆசிரியர்கள் குழந்தை உளவியலை ஆழமாக உள்வாங்கியிருக்க வேண்டும்.

இதுபோன்ற மாற்றங்களைத் தமிழ்நாடும் முன்னெடுக்க வேண்டும். மருத்துவம், பொறியியல் படிப்புகளைப் போல ஆசிரியர் பயிற்சிப் படிப்பை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருத வேண்டும். ஒவ்வோர் ஆண்டும் அவர்களது செயல்பாட்டை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்பக் கற்பித்தலைப் புதுப்பித்துக்கொண்டுள்ளனரா எனக் கண்டறிய வேண்டும். தொடர் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். மாநில பட்ஜெட்டில் பள்ளிக் கல்விக்குப் பெரும் பங்கு நிதி ஒதுக்க வேண்டும்.

கல்வி பரவலாக்கப்பட்டு எல்லாருக்கும் சமமாகக் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். அரசுப் பள்ளிகளின் தரம் உயரும்போது - கல்வி இலவசமாகக் கிடைக்கும்போது, மாணவர் ஒருவருக்கு ஆண்டுக்கு ரூ.50 ஆயிரத்திலிருந்து ரூ.1 லட்சம் வரை பொருளாதாரச் சுமை குறையும். தனியார் பள்ளிகளின் பிடி தளரும். முக்கியமாக, சிபிஎஸ்இ பாடத்திட்டத்திலிருந்து மாநிலப் பாடத்திட்டத்துக்கு மாணவர்கள் திரும்புவார்கள்.


மாநிலம் முழுவதும் ஒரே பாடத்திட்டம் என்பதைவிட, பொதுவான வழிகாட்டுதலோடு, அந்தந்தப் பகுதிகளுக்குத் தக்கவாறு பள்ளிக்கூடங்களே வடிவமைத்துக்கொள்வது சிறந்தது. மாணவர்களின் முழுத் திறமையை வெளிப்படுத்தத் தாய்மொழிக் கல்வியே சிறந்தது என 2016 யுனெஸ்கோ ஆய்வறிக்கை தெளிவுபடுத்துகிறது. அதை முழுமையாக ஏற்றுக்கொண்டு செயல்வடிவம் தர வேண்டும். கற்றல் என்பது தனிமனிதப் பயிற்சி என்பதை மாற்றி, கூட்டு முயற்சியாக்கும்போது மாணவர்களிடம் பேராற்றல் வெளிப்படுகிறது.

அரசின் கடமைகள்: பள்ளிக் குழந்தைகளின் உடல்நலமும் மனநலமும் மிகவும் முக்கியம். அதைக் கண்காணிக்க அருகிலுள்ள அரசு மருத்துவமனை மருத்துவர்கள் சுழற்சிமுறையில் பள்ளிகளுக்குச் சென்று மாணவர்களைப் பரிசோதிக்க வழிவகுக்க வேண்டும். தமிழ்நாட்டில் படிக்கும் அனைத்துப் பள்ளி மாணவர்களைக் குறித்து அரசிடம் இருக்கும் தரவுகளின் அடிப்படையில், ஏழாம் வகுப்பு வரும்போது மாணவர்களின் விருப்பம் எதை நோக்கி அமைந்திருக்கிறது என்பதை அறிவியல்பூர்வமாக, துல்லியமாகக் கணிக்க வேண்டும். பிறகு, அவர்கள் விரும்பும் துறைக்கு அவர்களைத் தயார்ப்படுத்த வேண்டும்.

பொறியியல், மருத்துவம், பொருளாதாரம், கலை என மாணவர்களின் பல்வேறுபட்ட விருப்பங்களின் புள்ளிவிவரக் கணக்கு இருக்க வேண்டும். இதெல்லாம் இன்றைக்கு விரல் நுனியில் அறிந்துகொள்ளக்கூடிய அளவுக்கு மென்பொருள் துறை வளர்ச்சி பெற்றிருக்கிறது. அரசு அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

எந்தத் துறையில், எவ்வளவு வேலைவாய்ப்புகள் உள்ளன, உருவாக்கப்படவிருக்கின்றன என்கிற தகவல்கள் திரட்டப்பட்டு ஒருங்கிணைக்கப்படும்போது, அதற்குத் தக்கவாறு மாணவர்கள் அந்தந்தத் துறைகளில் படித்துவிட்டு வரக்கூடிய வாய்ப்பு உள்ளது. எல்லாரும் கண்ணைக் கட்டிக்கொண்டு ஒரே துறையில் படித்து, பின்னர் போதிய வேலைவாய்ப்பு இல்லாமல் திணறுவதை இதன் மூலம் தவிர்க்கலாம். அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் நாம் இவற்றைச் சரிசெய்துவிட்டால், புதிதாக எழும் சவால்களை எதிர்கொள்ளும் திறன் கொண்ட ஏராளமான மாணவர்களை உருவாக்கலாம்!

நன்றி : இந்து தமிழ் திசை



சென்னை காத்திருப்பு போராட்டத்தின் போது அரசு தலைமைச் செயலாளருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அவர்களின் தலைமையில் வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் இணை ஆணையர் ஆகியோர் கலந்து கொண்ட விரிவான பேச்சுவார்த்தை 10.5.2023 அன்று நடைபெற்றது. நாள்

ABSTRACT

Land Records - Natham Settlement - Streamlining the different nomenclature used by diofferent dostricts / divisiona and taluks before the computerised system of Natham Land Records is brought online for the whole State (exce[t Chennai City) - Orders - Issued.

---

**Revenue & Disaster Management Department.**

**Survey & Settlement Wing, SS-II(1) Section**

GO.Ms.No.221 Dated : 04.05.2023

Read:

1. GO.Ms.No.1177, Commercial Taxes and Religious Endowment Department, dated 30.10.1987.
2. GO.Ms.No.1971, Revenue Department, dated 14.10.1988.
3. From the Director of Survey and Settlement, Letter No.C1/41/2023, dated 10.2.2023.
4. From the Commissioner of Land Administration, LetterNo.R1/ 4406311/2023, dated 27.3.2023.

ORDER:

The Director of Survey and Settlement has sent a proposal for changing the nomenclature with respect to dassification of lands to accurately reflect private and Government ownership of the lands for Natham land records.

2. The Commissioner of Land Administration has examined the proposal sent by Director of Survey and Settlement and recommended the proposal based on the following observations:

**I. History of Settlement:** Land records were created during the colonial times for purposes of collection of land revenue, i.e. for agricultural areas. Lands predominantly used for dwelling purposes (present day Natham settlement areas) were insignificant from the point of collection of land revenue, and were left out without settling the individual occupation or ownership with the overall remarks of 'grama natham' keeping the overall extent as a government poramboke. This situation prevailed in the Original Settlement Registers (OSR) and also in Resurvey and Resettlement Registers (RSR).

**II. History of Natham Settlement:** As the individual parcels in the Natham lands were in lengthy possession of individuals hereditarily or by transfer, the Government had ordered for Survey of Natham sites and the agricultural lands used for non-agricultural purposes vide G.O.Ms.No.1177, Commercial Taxes and Religious Endowment Department, dated 30.10.1987 and settlement operations were undertaken to levy ground rent and to issue ground rent patta to the owners thereof vide Notification published in G.O.Ms.No.1971, Revenue Department, dated 14.10.1988. During Natham survey and settlement operations in villages, the lands classified as "Sarkar/Government/Arasu - Poramboke " as per UDR A-Register with remarks as Natham/Grama Natham were considered for Natham Settlement work. Further, the agricultural lands outside the natham areas Le lands which were classified as ryobwari, were also taken up for natham settlement if they had been bult-up and used for non-agricultural purposes.

As per the Natham settlement notification, Natham lands were to be sub-divided and re-classified as follows:

(a) Lands with houses were granted Natham patta/ Natham manal patta and reclassified in Natham fair adangal as "Natham-manai";

(b) Lands lying vacant in between the houses were reclassified as 'Sarkar - vacant site with remarks as asms and meduneer and recorded accordingly in Natham fair adangal;

(c) Lands under some common public utilities like Streets, paths, temple, burial ground, Roads, parks, schools and others were reclassified as Sarkar Poramboke' with remarks as per its usage/state on ground;

(d) Also, as Ryot lands classified as Ryot-Wet/Dry/Manavari which were in agricultural usages and now converted for non-agricultural purposes by the land owners themselves had been also reclassified as Ryot-Manal and recorded accordingly in Natham fair Adangal Register.

**III. Different Nomenclatures adopted in natham settlemtent:** However on examination of the Natham adangal records across the State, it is seen that different practices have been followed in different areas of the State during Natham settlement, leading to varied nomenclature like Natham manai with pattadar name, natham poramboke with pattadar names, Sarkar natham manai with pattadar names, Arasu/ Sarkar manai with pattadar names, natham sondham with pattadar names, natham private with pattadar names, etc. Further, the erstwhile agricultural lands since been used for housing have been recorded as Ryoti-Manai.

**IV. Classification of land as Government vs Ryotwari:** Majority of the land of our State (then Madras Presidency) was under Ryotwari tenure and classified as Government villages. It is reiterated that the term 'Government' does not indicate ownership but only the tenure wherein the Government directly collected land revenue from the cultivator or the Ryot. Other land tenure systems involving intermediaries such as Inamdars, Estate, have been progressively abolished since 1948 and as of now only a few villages are pending settlement under the relevant Acts for abolition of the intermediary and introduction of ryotwari tenures. While the original definition of 'ryot' meant cultivator, over the years it has come to indicate lands in private ownership. When the estate village/Inam villages had been settled under Abolition Acts, the lands held by ryots as well as the private lands of the landholders have been classified as 'Ryot' in the meaning that it is a private patta land of the person to whom the patta was

During the initial survey and the resurvey in the then Madras Presidency, the cultivable lands in villages directly administered by the Government was registered as Govts Dry/Govt. Wet (G-D/G-W) only. The corresponding Inam lands were registered as Inam-dry and Inam-wet (I-D/I-W). Later during the years 1979-1984, when Updating Registry Scheme (UDR) was done, those both categories of lands owned by private individuals (as recorded in RSRS/SLRS) were classified as 'ryoti' lands. Thus the meaning of the term 'Ryoti/ryotwani' has been widely extended to refe to the private lands with citizens to whom the pattas were issued.

**V. Issues in nomenclature in Natham Adansa:** Natham Records software is proposed to be rolled out for use by citizens records so far are being handled physically by the taluk revenue authorities at present, and as a result there is no inconvenience to the common public since irrespective of the classification, the mutation of registries are being by all authorities respective of the classification and nomenclatura

However, upon rollout of the computerised system, if the different classified as Government manai, it will be treated as a Government land and transfer of registry will be prohibited. This will put the common public to extrome inconvenience. Further, this will give way to a wrong perception that Government lands are being encroached upon by the public which is not reflective of the reality. (These lands are private bars within the meaning of Natham Survey and Settlement)

The extract of computerized Natham chitta from the Tamil Nilam will be expected as a valid and legal document for all purposes by the Registration department and the planning authorities viz. Chennai Metropolitan Development Authority // Director of Town & Country Planning among others. Hence, it is essential to make necessary changes in the computerised land records to reflect the correct nomenclature

3. The Commissioner of Land Administration has therefore stated that there is a pressing need to address this issue and to bring in uniformity in Natham Land Records and recommended that the entries in Nacham records proposed to be brought online may be uniformly modified in Nacham Settlement Land Records and requested orders in prescribing a uniform nomendature with respect to classification of lands to accurately reflect private ownership and Government ownership of lands for natham lands in

4. The Government after careful examination of the proposal of Director of Survey and Settlement and Commissioner of Land Administration hereby issue order for prescribing a uniform nomenclature accurately reflect private and Government ownership of lands for Natham Land Records in the State (except Chennai City) as detailed below:

| SI. No | Classification nomenclature in Natham adangal | To be recorded as |
|---|---|---|
| 1. | Natham nanjai/punjal/manai with pattadar names | Ryobwari Manal |
| 2. | Natham poramboke with pattadar names. | Ryobwari Manal |
| 3. | Natham sondham with pattadar names | Ryobwari Manai |
| 4. | Natham private with pattadar names | Ryotwari Manal |
| 5. | Arasu manai/ sarkar manal with pattadar name | Ryotwari Manal |
| 6. | Natham lands that are classified as Sarkar Poramboke (அ.புற) in A- Register (Rural), but have been assigned Natham patta with proper entries in Natham Adangal under Natham Settlement scheme in 1996 / Arasu Porambokes with pattadar names | Ryotwari Manal |
| 7. | Lands that are classified as 'Sarkar Poramboke and marked as ‘காலிநத்தம்‘ and 'காலிமனை' in the remarks column of Natham adangal (with conditional patta issued by the Revenue department which has not yet completed the conditional period)8. | (National Informatics Centre to block transaction for condition period) |
| 8. | Lands that are classified as 'Sarkar Poramboke' (அ.புற) and marked as காலி நத்தம் and 'காலிமணை" in the remarks column of natham adangal, but without enjoyer. | Sarkar Poramboke |
| 9, | Lands that are classified as temple, burial ground, roads, State Highways, National Highways, parks, schools and other public utilities in Natham survey | Sarkar Poramboke |

5. The Director of Survey and Settlement and Commissioner of Land Administration are requested to take necessary further action on the orders issued at Para 4 above to reflect the correct classification in Natham Land Records.

(By Order of the Governor)

KUMAR JAYANT

ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT

ABSTRACT

Public Services - Medical Test for Drivers of Government Vehicles -Eye sight and hearing / reflex tests - Revised - Orders- Issued.

**Human Resources Management (K) Department**

G.O.(Ms.) No. 32,Dated: 19.04.2023

Order: In the Government Order first read above, orders have been issued that the drivers of Government Vehicles should undergo Medical tests, as indicated below:-

| | |
|---|---|
| 40 to 52 years | Once in 3 years |
| After 52 years | Once in a year |

3. In this regard, the Director of Medical Education, Kilpauk, Chennai-10 and the Director and Superintendent of the Regional Institute of Ophthalmology and Government Ophthalmic Hospital, Egmore, Chennai have, after convening the meeting with the Medical Professionals, suggested the following procedures to conduct medical tests (eye sight and hearing/reffex tests) for drivers of Govemment vehicles, working in all departments, as below:-

(1) Below 50 years - Once in two years

(ii) Above 50 years - Once in a year

4 The Government after careful examination have decided to accept the suggestion of the Director of Medical Education, Kilpauk, Chennai-10 and the Director and Superintendent of the Regional Institute of Ophthalmology and Government Ophthalmic Hospital, Egmore, Chennai and accordingly direct that the Drivers of Government Departments should undergo Medical tests, as indicated below:-

| | |
|---|---|
| Below 50 years | Once in 2 years |
| Above 50 years | Once in a year |



தேனி மாவட்டம் பெரியகுளம் வட்ட அலுவலகத்தில் மாநிலத் துணைத் தலைவர் தோழர் மங்களபாண்டியன் பங்கேற்றார்

Printed and Published by M.P.Murugaian on behalf of Tamil Nadu Revenue Officials' Association and Printed at Sekar Offset Printers, 168/1, Big Street, Chepauk, Chennai - 600 005 and published from No: 12, Krishnappa Street, Chepauk, Chennai - 600005. Editor K.Kumaresan.



கரூர் மாவட்ட பொதுக்குழுவில் கலந்துக்கொண்ட TNROA மாநிலத் துணைத் தலைவர் தோழர் கு.குமரேசன் மற்றும் மாநிலச் செயலாளர் தோழர் அன்பழகன்



மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சருடன் TNROA மாநில நிர்வாகிகள் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இறுதியில் பேச்சுவார்த்தை முடிவுகள் எழுத்துபூர்வமாக வழங்கப்பட்டது



திருச்சி மாவட்டம், துறையூர் வருவாய் ஆய்வாளர் பிரபாகரன் தாக்கப்பட்டதை கண்டித்து திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக 30.5.2023 அன்று நடைபெற்ற மாநிலம் தழுவிய கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநிலத் தலைவர் எம்.பி.முருகையன், மாவட்ட தலைவர் பிரகாஷ், மாவட்ட செயலாளர் பிரேம்குமார் உள்ளிட்ட மாவட்ட நிருவாகிகள், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் சங்கம் உள்ளிட்ட தோழமைச் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

"VARUVAITHURAI ALUVALAR SANGA KURAL"
May 2023

Under Postal Regd No. : TN/CH(C) / 295 / 15-17
RNI No. TN BIL 2000 / 3800 Dt : 6.6.2002

Publishing Date 3rd Week of Every Month
Registered New Paper
POSTED AT EGMORE RMS/1 PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM /
UNDER LICENCE NO. TNPMG (CCR) / WPP. 3 / 2015-2017

பெறுநர் :
திரு / திருமதி

If undelivered Please Return to :
தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்
ப.எண். 38/2, புதிய எண். 12,
கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம்,
சென்னை - 600 005



காஞ்சிபுரம் மாநகரில் 03.06.2023 அன்று நடைபெற்ற தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநில நிருவாகிகள் கூட்டம்.



**Printed and Published by M.P.Murugaian on behalf of Tamil Nadu Revenue Officials' Association and Printed at Sekar Offset Printers, 168/1, Big Street, Chepauk, Chennai - 600 005 and published from No: 12, Krishnappa Street, Chepauk, Chennai - 600005. Editor K.Kumaresan.**